# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2298/27 - 2022 සැප්තැම්බර් මස 21 වැනි බදාදා - 2022.09.21

*2298/27 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியற் பேரவைச் சட்டம்.**

*2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியற் பேரவைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் பொறியியல் பேரவையினால் ஆக்கப்பட்ட விதிகள்*

**திலக் த சில்வா,**
தவிசாளர்,
பொறியியல் பேரவை, இலங்கை

கொழும்பு,
*2022, செத்தெம்பர் 20.*

**விதிகள்**

*1.* இவ்விதிகள் இலங்கைப் பொறியியற் பேரவையின் ஒழுக்காற்று விசாரணை விதிமுறைகள் பற்றி எடுத்துக்காட்டப்படலாம். இலங்கைப் பொறியியற் பேரவையின் ஒழுக்காற்று விசாரணை விதிமுறைகள் 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் இணைக்கப்பட்டு நிறுவப்பட்டது.

**முன்னுரை**

பொறியியல் தொழிலர்களுக்கான பொதுவான மற்றும் நிலையுறுதியான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைமுறையொன்றைக் கொண்டிருப்பதற்கான அவசியம் இலங்கையில் நீண்ட காலமாக அடையாளங்காணப்பட்டுள்ளது. இந்நோக்கத்துக்காக, பொறியியல் தொழிலர்களுக்கிடையேயான உயர்தொழில்சார் துர்நடத்தை மற்றும் துர்ப்பழக்கம் அத்துடன் சச்சரவுகளும் பிணக்குகளும் உயர்தொழில்சார் வேலைகளையும் கடமைகளையும் புரிகையிலான தவறான புரிந்துகொள்ளுதல்களும் பற்றி நடாத்தப்பட்ட விசாரணைகள், உயர்தொழிலர்களுக்கு, அவர்களின் உயர்தொழில்சார் செயல்நிறைவேற்றுகையிலும் பெறுபேறிலும் குறைப்பொன்றை ஏற்படுத்தும் வழியில் முட்டுக்கட்டைகளாகவும் தடைகளாகவும் இருந்தன. ஆதலால், பொறியியல் தொழிலர்களின் ஒழுக்காற்று விசாரணைகளுக்கான இந்நடவடிக்கைமுறை, கூடுதல்சிறந்த செயல்நிறைவேற்றுகைக்காகவும் உடன்பாடின்மைகளைத் தீர்த்துவைப்பதற்கும் இணக்கத்துக்கான வழிகளை ஏற்படுத்துவதற்கும் அறிமுகப்படுத்தப்படுகின்றது. எனினும், உயர்தொழில்சார் துர்நடத்தை அல்லது துர்ப்பழக்கம் அசட்டைகாரணமாக அல்லது வேண்டுமென்று ஏற்பட்டிருப்பின், பொறியியல் தொழிலர்களுக்கிடையே மட்டுமன்றி ஒன்றில் இவ்வுயர்தொழிலுக்கான மூன்றாந்திறத்தவர்களாக அல்லது வெளியாட்களாக உள்ள முறைப்பாட்டாளர்களின் முறைப்பாடுகளின் மீதும் எல்லாத் திறத்தவர்களினதும் நியாயப்படுத்தத்தக்க கரிசனைகளைக் கருத்திற்கொண்ட பின்னர் பொறியியல் உயர்தொழிலிலிருந்து இது நீக்கப்படுதல் வேண்டும். உயர்தொழில்சார் நல்வாழ்வு மற்றும் உண்மைத்தன்மையின் கட்டுக்கோப்பினுள்


1A - G 5997 — 11 (2022/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திறன்களையும் உயர்தொழில்சார் நடத்தையையும் அபிவிருத்தி செய்வதற்கு இவை உயர்தொழில்சார் ஒழுக்காற்று வழிகாட்டுநெறிகளுடன் சேர்த்து ஒத்தமுறையில் அடையாளங்காணப்படுதல் வேண்டும். ஒழுக்காற்று விசாரணைகளுக்கான நடவடிக்கைமுறை, நாட்டின் சட்டத்துடனும் நீதியுடனும்/அதற்கிணங்கவும் ஒழுக்கக்கோவையினுள்ளும் தொடருதல் வேண்டும். இந்நோக்கங்களுக்காக, பொறியியல் தொழிலர்கள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகளுக்கான நடவடிக்கைமுறை, 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பொறியியற் பேரவைச் சட்டத்தின் 13 (ஏ) மற்றும் (ஐ) என்னும் பிரிவுகளின்படி பேரவைக் குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின்கீழ் இலங்கைப் பொறியியற் பேரவையின் அங்கீகாரத்துடன் பின்வருமாறு இத்தால் வெளிப்படுத்துகின்றது,

**பின்னணி**

ஒழுக்காற்று விசாரணைகள் நடவடிக்கைமுறை, 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியற் பேரவைச் சட்டத்தின் 12(ஈ) என்னும் பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்ட நோக்கத்தை எதிர்கொள்வதற்கு, இலங்கைப் பொறியியற் பேரவைச் சட்டத்தின் 13 (ஏ) மற்றும் (ஐ) என்னும் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்டுள்ளது; பேரவையின் ஏனைய பணிகளுள், பொறியியல் தொழிலர்களின் உயர்தொழில்சார் துர்நடத்தை தொடர்பான ஏதேனும் கருமத்தின்மீது விசாரணைகளை நடாத்துவதற்கு அது தத்துவமளிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைமுறையில் தரப்பட்டுள்ள எல்லாக் கட்டங்களும், நாட்டின் சட்டத்துக்கும் நீதிக்கும் இணங்கவும் ஒழுக்கக்கோவையினுள்ளும் நடாத்தப்பட்டு முடிவுகள் செய்யப்படுதல் வேண்டும். இந்த பேரவையின் ஒழுக்காற்று விசாரணைகள் நடவடிக்கைமுறையை வெளியிடுவதில், சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவத்தின்கீழ் மாண்புமிக்க அமைச்சரினால் ஒழுங்குவிதிகளாக வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தொடர்புபட்ட வழிகாட்டுகைக்குப் பேரவை அமைந்தொழுகுதல் வேண்டும்.

**உயர்தொழில்சார் துர்நடத்தை**

ஒரு பொறியியல் தொழிலரின் உயர்தொழில்சார் துர்நடத்தையின் அறிமுகங்களுக்கும் பொருள்கோடல்களுக்கும் இணங்க, இந்த ஒழுக்காற்று நடவடிக்கைமுறையானது, பேரவையின் பொறியியல் தொழிலர்களின் உயர்தொழில்சார் துர்நடத்தை பற்றிய எல்லா வகையினவையுமான சார்த்துதல்களையும் தொடர்வதற்குப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைமுறைகளில் தரப்பட்டுள்ள தத்துவங்களைப் பேரவையானது, தவிசாளருக்கு, பிரதான நிறைவேற்றலுவலருக்கு, முறைப்பாட்டுச் செயலாளருக்கு, பூர்வாங்கப் புலனாய்வுசார் குழாத்துக்கு, புலனாய்வாளருக்கு, ஒழுக்காற்றுக் குழாத்துக்கு மற்றும் ஒழுக்காற்றுச் சபையின் ஒழுக்காற்றுச் சபைத் தலைவருக்கு, சுமத்தப்பட்ட உயர்தொழில்சார் துர்நடத்தைபற்றிப் புலனாய்வு செய்து தீர்ப்பளிப்பதற்கும், இலங்கைப் பொறியியற் பேரவையின் ஏற்பாடுகளுக்கிணங்க உரித்தான தடைவிதிப்புக்களையும் கட்டளைகளையும் விதித்துரைப்பதற்கும், உயர்தொழில்சார் துர்நடத்தையாக அமையும் ஒரு செயல் அல்லது செய்யாமை நிலைநாட்டப்பட்டால் மற்றவற்றுக்கிடையே ஒழுக்காற்று விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் எனக் கையளிக்கின்றது.

**பொருள்கோடல்களும் சுருக்கீடுகளும்**

அ. சட்டம் - 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியற் பேரவைச் சட்டம்.

ஆ. இபொபே - இலங்கைப் பொறியியற் பேரவை.

இ. முறைப்பாட்டுச் செயலாளர் - இபொபே ஒரு முறைப்பட்டுச் செயலாளரை நியமிக்கும்.

ஈ. பூர்வாங்கப் புலனாய்வுச் சபை - பேரவையினால் நியமிக்கப்பட்டது; ஐந்துக்கு (5) மேற்படாத தனியாட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உ. பூர்வாங்கப் புலனாய்வுக் குழாம் - பூர்வாங்கப் புலனாய்வுச் சபையிலிருந்து முறைப்பாட்டுச் செயலாளரினால் மூன்று தனியாட்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

ஊ. ஒழுக்காற்றுச் சபை - இலங்கைப் பொறியியற் பேரவையின் தவிசாளரினால் நியமிக்கப்பட்டு, விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்களுக்கிணங்க ஓர் ஒழுக்காற்று விசாரணையை நடாத்துவதற்குத் தகவுடைய ஒன்றில் பேரவையுறுப்பினர்களிலிருந்து அல்லது உறுப்பினர்கள் அல்லாதோரிலிருந்து அல்லது இரண்டிலிருந்தும் ஏழு தனியாட்களுக்கு மேற்படாதோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

எ. ஒழுக்காற்றுக் குழாம் - ஒழுக்காற்றுச் சபையிலிருந்து மூன்று தனியாட்கள் முறைப்பாட்டுச் செயலாளரினால் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

ஏ. புலனாய்வாளர் - பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்ட ஒரு தனியாள்.

ஐ. இந்நடவடிக்கைமுறையில் பயன்படுத்தப்பட்ட "துர்நடத்தை" என்ற சொல், 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 16(6) ஆம் பிரிவினால் அவருக்கு அல்லது அவளுக்கு உரித்தாக்கப்பட்டு சட்ட ஆற்றலின்கீழ் மாண்புமிக்க அமைச்சரினால் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குவிதிகளினூடாக அறிமுகப்படுத்தப்படுகின்ற மற்றும் அறிமுகப்படுத்தப்படும் எல்லாச் செயல்களும் அத்துடன்/அல்லது செய்யாமைகளும் என்ற பொருளாவதுடன் அவற்றையும் உள்ளடக்கும்.

**ஒழுக்காற்று விசாரணைகள் நடவடிக்கைமுறை**

ஒரு பொறியியல் தொழிலரின் உயர்தொழில்சார் துர்நடத்தை பற்றிய எல்லாச் சார்த்தல்களும் இந்நடவடிக்கைமுறையின்கீழ் விசாரணைசெய்யப்படுதல் வேண்டும்.

1. பேரவையானது, பொறியியல் தொழிலர்கள் தொடர்பாக ஏழு வகையான சார்த்தல்களை, முறைப்பாடுகளை, பிணக்குகளை மற்றும் மோதல்களை ஏற்றங்கீகரிக்கின்றது. பின்வரும் பொருளையுடையதாகும்,

    அ) உயர்தொழில்சார் தீங்கானநடாத்துகை தொடர்பாகப் பொறியியல் தொழிலர்களிடையே பொறியியல் உயர்தொழில்சார் பிணக்குகள்.

    ஆ) பொறியியல் தொழிலர்களுக்கும் ஒரு மூன்றாம் ஆளுக்கும் (ஆட்களுக்கும்) இடையிலான பிணக்கு. (மூன்றாம் ஆள் என்பது, பொறியியலாளர் ஒருவராகவிராத எவரேனுமாள் அல்லது ஏதேனும் பொறியியல் தொழிலைக் கொண்டுநடாத்தாத எவரேனும் சட்ட ஆள் என்று பொருளாகும்).

    இ) பொறியியல் தொழிலர்கள் அத்துடன்/அல்லது பொறியியல் உயர்தொழில்சார் குழு/குழுக்கள் அல்லது பதிவுசெய்யப்பட்ட மற்றும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பொறியியல் ஆலோசனை ஒழுங்கமைப்புகள் அல்லது நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையிலும் அவற்றுக்கிடையேயுமான பிணக்குகள்.

    ஈ) இபொபே சட்டத்தினதும், அதன் விதிகளினதும் அல்லது ஒழுங்குவிதிகளினதும் மீறுகை, அத்துடன் உயர்தொழில்சார் துர்நடத்தையாக அமைகின்ற செயல் அல்லது செய்யாமை.

    உ) இபொபே இன் உயர்தொழில்சார் நடத்தை மற்றும் ஒழுக்கக்கோவையின் ஏதேனும் மீறுகை.

    ஊ) தனிப்பட்ட அந்தஸ்து (வேலையுடன் சம்பந்தப்படாத குற்றவியல் தவறுகள்).

2. உயர்தொழில்சார் துர்நடத்தைக்கெதிரான முறைப்பாடுகள் பொறியியற் பேரவையின் முறைப்பாட்டுச் செயலாளருக்குப் பதிவஞ்சலில் செய்யப்படுதல் வேண்டும். அவரது அல்லது அவளது முகவரியானது முறைபாட்டுச் செயலாளர், இலங்கைப் பொறியியற் பேரவை, இல. 230 பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7 ஆகும்.

    அ) தவறான செயல் அல்லது செய்யாமை வெளிப்படுத்தப்பட்டதிலிருந்து ஆறு (06) பஞ்சாங்கமாதங்களினுள் முறைப்பாடுகள் எல்லாம் மேலே குறிப்பிடப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கிணங்க அளிக்கப்படுதலும் அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும். ஆனால் எவரேனும் முறைப்பாட்டாளர், அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவொரு காரணத்துக்காக விதிக்கப்பட்ட காலத்தினுள் தனது முறைப்பாட்டை அளிப்பதற்குத் தன்னைத் தடுத்த அல்லது தடங்கல்செய்த தவிர்க்கமுடியாத மற்றும் விசேட சூழ்நிலைகளைக் குறிப்பிட்டு, ஆதாரப்படுத்துவதற்கான இயைபான சான்றுடனானவொரு சத்தியக் கடதாசியுடன் சேர்த்து விதிக்கப்பட்ட காலத்தின்பின்னர் நியாயமானவொரு காலத்தினுள் முறைப்பாடொன்றை அளித்தால், அது ஏற்றுக்கவனிக்கப்படுவதற்குப் பேரவையினால் கவனத்துட்கொள்ளப்படமுடியும்.

    ஆ) முறைப்பாடெதுவும் பெறப்படாதவிடத்து ஆனால் ஊடகத்திலான செய்தியொன்றின் அடிப்படையிலானதாக இருக்குமிடத்து சார்த்துதலொன்றைப் புலனாய்வுசெய்யும்படி இபொபே முறைப்பாட்டுச் செயலாளரைப் பணிக்கலாம்.

    இ) இபொபே ஆனது அநாமதேய முறைப்பாடுகள் எவற்றையும் கையாளமாட்டாது; அத்துடன் பொறியியல் தொழிலர்கள் பற்றிய உயர்தொழில்சார் துர்நடத்தைச் சார்த்துதல்கள் தொடர்பான முறைப்பாடுகளை மட்டுமே கவனத்துட்கொள்ளும்.

    ஈ) முறைப்பாட்டுச் செயலாளர், பெறப்படுகின்ற திகதிகளையும் நேரத்தையும் காட்டுகின்ற எல்லா முறைப்பாடுகளையும் பெற்றமைபற்றிய எழுத்திலான பதிவேடுகள் தொடர்பிலான இடாப்பைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் முறைப்பாட்டுச் செயலாளர் எழுத்திலான முறைப்பாட்டுடன் சேர்த்து இணைப்பொன்றாகக் கடிதவுறையை வைத்திருக்கவும் வேண்டும்.

    உ) முறைப்பாட்டுச் செயலாளர், முறைப்பாட்டின் பிரதியொன்றை வைத்திருந்து, முறைப்பாட்டைப் பெற்றதிலிருந்து 7 நாட்களினுள் அதனைப் பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்துக்கு அனுப்பிவைத்தலும் அளித்தலும் வேண்டும். முறைப்பாட்டுச் செயலாளர், மேலே குறிப்பிடப்பட்டவாறு பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்துக்கு முறைப்பாடுகளை அனுப்பிவைத்தமைக்கான பதிவேடுகளை, பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்தின் ஓர் உறுப்பினரிடமிருந்தான கையொப்பத்துடன் தனிவேறான இடாப்பொன்றில் வைத்திருத்தலும் வேண்டும்.

ஊ) பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்துக்கு முறைப்பாடொன்றை ஆற்றுப்படுத்தும்போது, முறைப்பாட்டுச் செயலாளர், பேரவையின் (இபொபே) தவிசாளரினது வழிகாட்டுகையுடனும் பணிப்புக்களுடனும், பூர்வாங்கப் புலனாய்வுச் சபையிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று தனியாட்களைக்கொண்ட பூர்வாங்கப் புலனாய்வுக் குழாமொன்றைக் கூட்டுவர்.

3. முறைப்பாட்டுச் செயலாளர், எல்லாத் திறத்தவர்களையும் எழுத்தில் அழைப்பதற்கும் நிகழ்வுகளையும் தொடர்புபட்ட ஆவணங்களையும் அவர்களிடமிருந்து சேகரிப்பதற்கும் 14 நாட்களினுள் புலனாய்வாளரொருவரை நியமிக்கும்படி பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்தைப் பணித்தலும் அதற்கு ஆணையிடுதலும் வேண்டும். அப்புலனாய்வாளர் பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்தின் உறுப்பினர்களுள் ஒருவராகவிருத்தல் வேண்டும்.

அ) நிகழ்வுகளையும் விளக்கங்களையும் சேகரிக்கையில் ஒவ்வொரு திறத்தவரையும் நேரடியாக அழைப்பதற்குப் புலனாய்வாளர் சட்டப்படி அனுமதிக்கப்படுகின்றார். ஒவ்வொரு திறத்தவரினதும் முக்கியமான ஆவணங்களுடனும் கூற்றுக்களுடனும் சேர்த்து புலனாய்வாளர் அவதானிப்புக்களைப் பற்றிய சுருக்கமான அறிக்கையுடன் தனது புலனாய்வை ஆயத்தஞ்செய்து முடிவுறுத்துதல் வேண்டுமென்பதுடன் முடிவுற்ற சுருக்கமான அறிக்கையை எல்லா இணைப்புக்களுடனும் அவரது நியமனத்திலிருந்து 21 நாட்களினுள் பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

ஆ) ஏனைய குழாம் உறுப்பினர்கள் புலனாய்வாளரின் அறிக்கைகளையும் எல்லா இணைப்புக்களையும் அவதானிப்புக்களையும் கவனத்துட்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் குழாம் உறுப்பினர்களுள் ஒவ்வொருவரும் தமது சொந்த அவதானிப்புக்கள் பற்றித் தனிவேறான சுருக்க முடிவொன்றைத் தயாரித்து மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக ஒழுக்காற்றுச் சபைக்கு இரண்டு வாரங்களினுள் அதனை அளித்தலும் வேண்டும்.

இ) ஒழுக்காற்றுக் சபைக்குப் பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்தினால் அளிக்கப்பட்ட அவதானிப்புக்களும் முடிவுகளும்பற்றிய மூன்று தனிவேறான சுருக்கங்களைப் பெற்றபின்னர், ஒழுக்காற்றுச் சபையின் தலைவர் அவற்றை ஒப்புக்கொண்டு ஓர் ஒழுக்காற்றக் குழாத்தை நியமிக்கும்படி முறைப்பாட்டுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

4. ஒழுக்காற்றுச் சபையானது பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏழிற்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும். ஒழுக்காற்றுச் சபையின் உறுப்பினர்கள் ஓராண்டுக்குப் பதவிவகித்தல் வேண்டும். இக்காலம், மேலதிக ஓராண்டுக் காலத்துக்குப் புதுப்பிக்கப்படலாம். இலங்கைப் பொறியியலாளர் பேரவையின் தவிசாளர் ஒழுக்காற்றுச் சபையின் எல்லா உறுப்பினர்களையும் நியமிப்பதற்குத் தத்துவமளிக்கப்படுகின்றார். ஒழுக்காற்றுச் சபையானது, ஒன்றில் பொறியியற் பேரவையின் உறுப்பினர்களை அல்லது இலங்கைப் பொறியியற் பேரவையின் உறுப்பினர்களாகவிராத தகுதிவாய்ந்த, தகவுடைய ஆட்களை அல்லது இரண்டையும் கொண்டிருக்கமுடியும். பேரவையின் தவிசாளர் ஒரு பஞ்சாங்க ஆண்டிற்காக ஒழுக்காற்றுச் சபையின் எல்லா உறுப்பினர்களையும் நியமிப்பார். பொறியியற் பேரவைத் தவிசாளரின் விருப்பத்தின்படி இன்னுமோர் ஆண்டுக்கு நீடிக்கப்படுவதற்கு இது அமைந்ததாகும். ஒழுக்காற்றுச் சபையின் உறுப்பினர்களுள் ஒருவர் பேரவையின் தவிசாளரினால் ஒழுங்காற்றுச் சபையின் தலைவராகப் பெயர்குறித்துநியமிக்கப்படுதல் வேண்டும். ஒழுக்காற்றுச் சபையின் தலைவர், நிருவாகத் தேவைப்பாடுகளை வசதிப்படுத்துவதற்கு மட்டுமே பெயர்குறித்துநியமிக்கப்படுதல் வேண்டும். ஒழுக்காற்றுச் சபையின் தலைவர், ஒழுக்காற்றுச் சபையின் உறுப்பினர்களது சுயேச்சையான முடிபுகளுடன் அத்துடன்/அல்லது ஒழுக்காற்றுக் குழாத்தின் உறுப்பினர்களது சுயேச்சையான முடிபுகளுடன் இடையீடுசெய்வதற்கு ஏதேனும் தத்துவத்தை அல்லது அதிகாரத்தைக் கொண்டிருக்கமாட்டாது.

அ) இந்நடவடிக்கைமுறையின் பந்தி 3 (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு ஒழுக்காற்றுச் சபையின் தலைவரினால் முறைப்பாட்டுச் செயலாளர் அறிவிக்கப்படும்போது, முறைப்பாட்டுச் செயலாளர், ஒவ்வோர் அறிவிப்பின்படியும், மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக ஒழுக்காற்றுச் சபையிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று தனியாட்களைக்கொண்ட ஒழுக்காற்றுக் குழாமொன்றைப் பெயர்குறித்துநியமித்தலும் அமைத்துருவாக்குதலும் வேண்டும்.

ஆ) பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்திடமிருந்து சுருக்கத்தை (இணைப்புக்களுடனும் சுருக்கத்துடனும் முழு அறிக்கையை பெற்றதிலிருந்து 14 நாட்களினுள், ஒழுக்காற்றுக் குழாம், முறைப்பாட்டாளரினால் பொறியியல் தொழிலருக்கெதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கிணங்கக் காரணங்காட்டும்படி அல்லது விளக்கங்களை அளிக்கும்படி அவரைக் கோருகின்ற கடிதமொன்றைத் தயாரிப்பதற்கு ஓர் அமர்வை அழைக்க வேண்டும்.

இ) ஒழுக்காற்றுக் குழாம், காரணங்காட்டும்படியும் விளக்கமளிக்கும்படியும் கோரி, பதிவஞ்சலின்மூலம் பொறியியல் தொழிலருக்குக் கடிதமொன்றை அனுப்புதல் வேண்டும். அப்போது விளக்கத்துக்கும் காரணங்காட்டுவதற்குமான கடிதத்தை பெற்றபின்னர் காரணங்காட்டுவதற்கும் அல்லது விளக்கங்களை அளிப்பதற்கும் ஆகக்குறைந்தது இரண்டு வாரங்களேனும் தொழிலருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

ஈ) ஒழக்காற்றுக் குழாம், பூர்வாங்கப் புலனாய்வுக் குழாத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நிகழ்வுகள்பற்றிய பூர்வாங்கச் சுருக்கத்தின் ஒவ்வோர் ஆவணத்தையும் பரிசோதனை செய்தல் வேண்டும். ஒழுக்காற்றுக் குழாத்தின் மூன்று உறுப்பினர்களின் அவதானிப்புக்களைப் பதிந்த பின்னர் ஒழுக்காற்றுக் குழாம் ஒழுக்காற்று விசாரணையொன்றைத் தொடருதல் வேண்டும்.

5. பொறியியல் தொழிலர், விதிக்கப்பட்ட காலத்தினுள் அல்லது வேறுவகையாக, காரணங்காட்டுகையை அல்லது விளக்கத்தை அளித்தால், குழாமானது ஒழுக்காற்று விசாரணைக்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். அவர்/அவள் காரணங்காட்டுகையை அல்லது விளக்கத்தை அளித்திருப்பின், விசாரணையில் மேற்கொண்ட நுனித்தாராய்வுக்காக ஒழுக்காற்று விசாரணைக் கோப்பில் அது உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(அ) புலனாய்வு குழாத்தினால் செய்யப்பட்ட சுருக்கங்களின் அவதானிப்புக்களுக்கும் கண்டுபிடிப்புக்களுக்குமிணங்க ஒழுக்காற்றுக் குழாம் ஒரு "குற்றச்சாட்டுப்பத்திரத்தை" தயாரித்தல் வேண்டும். ஒழுக்காற்றுக் குழாமானது, அக்குற்றச்சாட்டுப் பத்திரத்தைப் பதிவஞ்சலில் பொறியியல் தொழிலருக்கு அல்லது ஒரு சட்டக்குழுவுடன் அல்லது உயர்தொழில்சார் நிறுவனத்துடன் இணைந்துள்ளவரும் அதற்காக வேலை புரிகின்றவருமான பொறியியல் தொழிலருக்கு, முறைப்பாட்டாளருக்கான பிரதியொன்றுடன் 14 நாட்களினுள் எழுத்திலான மறுமொழியை அனுப்பிவைக்கும்படி அவரை/அவளைக் கேட்டு அல்லது கோரி அல்லது பணித்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) குற்றச்சாட்டுப்பத்திரத்தின் மேல்மத்தியில் "இலங்கைப் பொறியியற் பேரவையில்" என்ற தலையங்கமிடப்படுதல் வேண்டும். குற்றச்சாட்டுப்பத்திரத்தில், முறைப்பாட்டாளரின் தலைப்புப் பெயருடன் மேல் வலதுபக்க மூலையில் முறைபாட்டாளரின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்படுதல் வேண்டும். எந்தப் பொறியியல் தொழிலருக்கெதிராக அல்லது பொறியியல் நிறுவனத்துக்கெதிராக அல்லது ஆலோசனை நிறவனத்துக்கெதிராக அல்லது சட்டக்குழுவுக்கெதிராகச் சார்த்தல்கள் செய்யப்படுகின்றனவோ அவரின் அல்லது அதன் பெயரும் முகவரியும் எண்வரிசை ஒழுங்கின்படி பிரதிவாதிகளின் தலைப்புப் பெயருடன் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(இ) (i) "இலங்கைப் பொறியியற் பேரவை, ஒழுக்காற்றுச் சபைத்தலைவர்" என்ற அவரது தலைப்புப் பெயருடன் குற்றச்சாட்டுப்பத்திரம் ஒழுக்காற்றுச் சபையின் தலைவரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(ii) தலைவரின் கையொப்பத்துக்குமேல் "பொறியியற் பேரவையின் கட்டளைப்படி" அல்லது சிங்களத்தில் இது எழுதப்படுதல் வெண்டும்.

(iii) இலங்கைப் பொறியியற் பேரவை, ஒழுக்காற்றுச்சபைத் தலைவர் எனக் காட்டுகின்ற இலச்சினையொன்று குற்றச்சாட்டுப்பத்திரத்தின்மீது இருத்தல் வேண்டும்.

(iv) குற்றச்சாட்டுப்பத்திரத்தின் குற்றச்சாட்டுக்கள் "குற்றச்சாட்டுப்பத்திரம்" என்ற தலைப்புப்பெயரின் தலையங்கத்துடன் இருத்தல் வேண்டும். இப்பாகம் மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைமுறை 5 (ஆ) வில் அறிமுகப்படுத்தப்பட்ட தலைப்பின்கீழ் குறிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன் குற்றச்சாட்டுக்களுள் ஒவ்வொன்றும் எண்வரிசை ஒழுங்கின்படி ஒன்றொன்றாக எடுத்துக்காட்டப்படுதலும் வேண்டும்.

(ஈ) கணிசமானளவிலான காரணங்களையும் சிரமங்களையும் காட்டி பொறியியல் தொழிலரினால் அல்லது பிரதிவாதியினால் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கையின்மீது மறுமொழியொன்றைக் கோப்பிடுவதற்கான திகதியை ஒழுக்காற்றுக் குழாம் நீடிக்க முடியும். ஆனால் நீடிக்கும் காலப்பகுதி, மறுமொழி அளிக்கப்படவேண்டிய திகதியிலிருந்து 30 நாட்களை விஞ்சுதல் ஆகாது.

(உ) பொறியியல் தொழிலர் அல்லது ஆலோசனைக் குழு அல்லது நிறுவனம் ஒன்று விதிக்கப்பட்ட காலத்தினுள் மறுமொழியொன்றை அளிக்கத்தவறின் அல்லது மறுமொழியொன்றை அளிப்பதற்கான காலத்தை நீடிப்பதற்கான விண்ணப்பத்தைச் செய்யத்தவறின், ஒழுக்காற்றுக் குழாம், முறைப்பாட்டாளரினால் முன்வைக்கப்பட்ட சாட்சிகளுடனும் சான்றுடனும் முறைப்பாட்டின்மீது மறுதிறத்தவரில்லா விசாரணையை எடுத்துக்கூறும்.

(ஊ) (i) விசாரணை மறுதிறத்தவரில்லாது அல்லது திறத்தவர்களுக்கிடையே நடாத்தப்படுவதைப் பொருட்படுத்தாது, இந்நடவடிக்கைமுறையில் குறிப்பிடப்பட்டவாறு மேற்கொண்ட நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(ii) சான்றையும், சாட்சிகளையும், முறைப்பாட்டையும் கவனத்துட்கொண்டபின்னர் (சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின்கீழான தண்டத்துக்கு அத்துடன்/அல்லது பேரவையினால் நிறைவேற்றப்பட்ட வேறேதேனும் ஒழுங்குவிதியின் மீறுகைக்கான தண்டத்துக்கு அமைந்ததாகவுள்ள செயலினால் அல்லது செய்யாமையினால் தவறை (தவறுகளை) புரிகின்ற) பொறியியல் தொழிலரின் அத்துடன்/அல்லது பொறியியல் நிறவனத்தின் அல்லது பொறியியல் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆலோசனை நிறவனத்தின் அல்லது சட்டக்குழுவின் ஏதேனும் துர்நடத்தையை ஒழுக்காற்றுக் குழாம் அவதானித்தால், ஒழுக்காற்றுக் குழாம் அதன் முடிபை ஒழுக்காற்றுச் சபைக்கு அளித்தல் வேண்டும்.

(iii) ஒழுங்காற்றுச் சபையின் தலைவரினது கையொப்பத்துடனும் இலச்சினையுடனும் ஒழுக்காற்றுக் குழாத்தின் முடிபை அல்லது யோசனையைக் கையொப்பமிட்ட பின்னர் ஒழுக்காற்றுச் சபையானது அதனைப் பேரவையின் முறைப்பாட்டுச் செயலாளருக்கு அனுப்புதல் வெண்டும்.

(iv) ஒழுக்காற்றுச் சபையிடமிருந்து ஒழுக்காற்று முடிபைப் பெற்றபின்னர், முறைப்பாட்டுச் செயலாளர், முடிபைப் பெற்றமை பற்றிய விபரங்களை அவரது பதிவேடுகளில் பதிதல் வேண்டுமென்பதுடன் அம்முடிபைப் பேரவைத் தவிசாளருக்குக் கையளித்தலும் வேண்டும்.

(v) மேற்குறிப்பிடப்பட்ட முடிபைப் பெற்றபின்னர், பேரவை, இந்நடவடிக்கை முறையின் பந்தி 9(1) இல் குறிப்பிடப்பட்ட நிலைமைகளைத் தவிர, முறைப்பாடு தொடர்பாக ஒழுக்காற்றுச் சபையினால் அளிக்கப்படுகின்ற ஒழுக்காற்று முடிபை அல்லது யோசனையை எடுத்துக்கூறுதல் வேண்டும்.

(vi) இம்முடிபில், ஒழுக்காற்றுச் சபை, ஒரு பொறியியல் நிறுவனத்தினால் அல்லது ஆலோசனை நிறுவனத்தினால் அல்லது சட்டக்குழுவினால் புரியப்பட்ட ஒரு தவறை (தவறுகளை) ஏற்றங்கீகரித்திருப்பின், பேரவையானது, சட்டத்தின் 40(1) ஆம் பிரிவினால் பேரவைக்குரித்தாக்கப்பட்ட சட்ட ஆற்றலினுள் குற்றச்சாட்டுக்காக (குற்றச்சாட்டுக்களுக்காக) அவ்வாறாக அழைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்துக்கு அல்லது ஆலோசனை நிறுவனத்துக்கு அல்லது சட்டக்குழுவுக்கு அல்லது குழுக்களுக்கு எதிராக வழக்குத்தொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கமுடியும்.

6. இந்நடவடிக்கைமுறையின் 5)எ)(1) றினால் யோசனையளிக்கப்பட்ட நடவடிக்கைமுறையுடன் சேர்த்து, பொறியியல் தொழிலர் அவரது பதிவை விதிக்கப்பட்ட காலத்தினுள் அளித்திருப்பின்,

(அ) ஒழுக்காற்றுக் குழாம், ஓர் ஒழுக்காற்று விசாரணையை நடாத்துவதற்கான திகதியையும், நேரத்தையும், இடத்தையும் நிர்ணயித்து, எதிர்பார்க்கப்பட்ட விசாரணைத் திகதிக்கு ஒரு வாரத்துக்குமுன்னர் குற்றவழக்குத்தொடுக்கும் அலுவலரொருவரை அத்துடன்/அல்லது எதிர்வாதிடும் அலுவலரொருவரை அவர்களின் முகவரிகளுடனும் தொலைபேசி இலக்கங்களுடனும் நியமிக்கும்படி முறைப்பாட்டாளருக்கும் பிரதிவாதிக்கும் (பிரதிவாதிகளுக்கும்) அறிவித்தல் வேண்டும். குற்றவழக்குத்தொடுக்கும் அலுவலர் அல்லது எதிர்வாதிடும் அலுவலர் சட்டத்தரணியொருவராக இருத்தலாகாது. ஆனால் குறிப்பிட்ட அலுவலர் குற்றவழக்குத் தொடுக்கையில் அல்லது எதிர்வாதிடுகையில் ஒரு சட்டத்தரணியின் உதவியைப் பெறமுடியும்.

(ஆ) முறைப்பாட்டாளர் ஒரு குற்றவழக்குத் தொடுக்கும் அலுவலரை நியமிக்கவில்லையாயின் அல்லது நியமிக்க இயலாதவராகவிருந்திருப்பின், ஒழுக்காற்றுக் குழாத்தின் எழுத்திலான அதிகாரத்துடன் நேரடியாகப் புலனாய்வை நடாத்திய புலனாய்வாளர் ஒரு விசாரணையிலான குற்றவழக்கை நடாத்துதல் வெண்டும்.

(இ) விசாரணை நாளன்று, இயன்ற தீர்த்துவைத்தல்கள் எவையேனுமிருப்பின் அவற்றை அளிப்பதற்குக் குழாமானது இருதிறத்தவர்களையும் அழைக்கமுடியும்.

(ஈ) சார்த்துதலானது விசேடித்த தன்மையினதானவொரு கருமத்துடன் தொடர்புபடுமிடத்து, குழாமானது, சுயேச்சையான நிபுணச்சாட்சியொருவரை ஈடுபடுத்துவதனைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும். குழாமானது சான்றைப் பரிசோதனைசெய்தபின்னர் முடிபுசெய்யலாம் அல்லது, கூடுதல் பாரதூரமான அல்லது சிக்கலான விடயங்களில் எல்லாத் திறத்தவர்களும் அதற்கு அழைக்கப்படும் நீடித்த கேட்பொன்றை ஒழுங்குபடுத்தலாம்.

(உ) கேட்புக்கள் வெளிப்படையான நியாயத்தன்மையுடன் நடாத்தப்படுதல் வேண்டும். ஒழுக்காற்று விசாரணையானது, பொறுப்புவிடுப்புக்கள், முறைப்பாடுகளின் தள்ளுபடிகள், விடுதலைசெய்தல்கள், அல்லது குற்றத்தீர்ப்புக்கள் பற்றிய ஒழுக்காற்று நடவடிக்கைகளின் முன்மொழிவுகளுடன் 6 பஞ்சாங்க மாதங்களினுள்ளான அல்லது நியாயமான காலத்தினுள்ளான ஒரு முடிபுடன் அல்லது யோசனையுடன் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

7. முடிபானது குற்றத்தீர்ப்பளிக்கப்படுதவதற்கானதாகவிருப்பின் (இதன் பொருள் என்னவெனில், இயல்திற சமநிலையின் சட்ட அம்சத்தின்மீது உயர்தொழில்சார் துர்நடத்தை நிலைநாட்டப்பட்டு எண்பிக்கப்படுகின்றதெனக் குழாம் முடிபுசெய்யின்) ஒழுக்காற்றுக் குழாம், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பின்வரும் தடைவிதிப்புக்களை விதிக்கலாம் அல்லது அவற்றுக்கு யோசனையளிக்கலாம்;

(அ) உயர்தொழில்சார் நடத்தை மற்றும் ஒழுக்கக்கோவையைப் பின்பற்றும்படி பொறியியல் தொழிலருக்கு வழிகாட்டுதல்;

(ஆ) பொறியியல் தொழிலருக்கு எழுத்திலான எச்சரிக்கையொன்றை வழங்கி அவருக்கு அல்லது அவளுக்கு எதிரான விதிப்பை அவர்களின் தொழிற் பதிவேடுகளில் உள்ளடக்குதல்;

(இ) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதியினுள் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள்மீது பயிற்சிக்கு வருகைதருமாறு பொறியியல் தொழிலரைத் தேவைப்படுத்துதல்;

(ஈ) சார்த்துதல் சம்பந்தாக வேறோராளிடம் மன்னிப்புக்கோருமாறு பொறியியல் தொழிலரைத் தேவைப்படுத்துதல்;

(உ) பிரிவு 16(2) இன் கீழ் அத்தகைய காலப்பகுதிகளுக்காகப் பொறியியல் தொழிலரின் பதிவை இடைநிறுத்தல்;

(ஊ) பிரிவு 16 (1) (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) இன் கீழ் பொறியியல் தொழிலரின் பதிவை இல்லாதாக்குதல்;

(எ) சட்டத்தின் 40 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்ட தண்டங்களுக்காகச் சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்.

8. ஒழுக்காற்றுக் குழாத்தின் பெரும்பான்மை முடிபு அல்லது யோசனை இபொபே இன் இறுதியானதும் முற்றானதுமான முடிபாகவிருத்தல் வேண்டும். முடிபானது பெரும்பான்மைத் தீர்ப்புரையாகவிருப்பினுங்கூட, அது, ஒழுக்காற்றுக் குழாத்தின், ஒழுக்காற்றுச் சபையின் மற்றும் இலங்கைப் பொறியியற் பேரவையின் பிரிக்கப்படாததும் ஏகமனதானதுமான முடிபாகக் கருதப்படுதல் வேண்டும். பொறியியற் பேரவை, இரு கையொப்பங்களுடனும் அதிகாரமளிக்கப்பட்டவொரு முத்திரையுடனும் முடிபை எடுத்துக்கூறி புறக்குறிப்பிடும். மேலே குறிப்பிடப்பட்ட முடிபு அல்லது யோசனை, பேரவையின் அலுவலக முறையான இலச்சினையுடன் இரு ஆட்களினால், அதாவது இலங்கைப் பொறியியற் பேரவையின் தவிசாளரினாலும் ஒழுக்காற்றுச் சபையின் தலைவரினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும். பேரவையின் அலுவலகமுறையான முடிபு முறைப்பாட்டாளருக்கும் பிரதிவாதிகளுக்கும் எழுத்தில் பதிவஞ்சலின்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

9. (i) ஒரு பொறியியல் தொழிலரின் பதிவு இல்லாதாக்கப்பட்டமை பற்றிய முடிபைப் பேரவை எடுத்துக்கூற முடிபுசெய்தல், அத்தகையவோர் இல்லாதாக்குகையை எடுத்துக்கூறுவதற்குத் திருப்திப்படுமுன்னர் பிரிவு 16 (1) றினால் (ஒன்றில் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) இன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை) மேவப்பட்டு இணங்கியொழுகப்பட்ட சட்ட அத்துடன் / அல்லது இடைநேர்விளைவான காரணிகள் உள்ளனவாவென்பதைப் பேரவை கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(ii) இறுதி முடிபு இந்நடவடிக்கைமுறையின் 7(உ) அல்லது 7(ஊ) இன்கீழ் எடுத்துக்கூறப்பட்டால், பேரவையானது 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு 16(3) இன்கீழ் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இப்பிரிவின்படி, பதிவின் அத்தகைய இடைநிறுத்துகையை அல்லது பதிவின் இல்லாதாக்குகையைச் செய்வதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, பொறியியல் தொழிலருக்குப் பேரவையானது இல்லாதாக்குகைக்கான அல்லது இடைநிறுத்துகைக்கான காரணம்பற்றிய அறிவித்தலொன்றைப் பதிவஞ்சலிலான கடிதமொன்றின்மூலம் அனுப்புதல் வேண்டும். பொறியியல் தொழிலர் முடிபைத் தள்ளுபடிசெய்வதற்கு ஏதேனும் வாதவுரையை அல்லது விளக்கத்தை அளிக்க விரும்பினால் மேலே குறிப்பிடப்பட்ட கடிதம் பெறப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் அது பதிவஞ்சலில் பேரவைக்கு அனுப்பப்படுதல் வேண்டுமென அவருக்கு/ அவளுக்கு அக்கடிதத்தில் இபொபே தெளிவான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

10. பந்தி 9(ii) இல் குறிப்பிடப்பட்ட விதிக்கப்பட்ட காலத்தினுள் பொறியியல் தொழிலர் விளக்கத்தை அனுப்பினால், பேரவையானது விளக்கத்தை அல்லது வாதவுரையைக் கவனத்துட்கொண்டு, ஒன்றில் முடிபைத் தள்ளுபடிசெய்வதற்கு அல்லது முடிபை மீளாய்வதற்கு அல்லது முடிபை அது இருந்தவாறு நிறைவேற்றுவதற்கு முடிவொன்றுக்கு வருதல் வேண்டும்.

11. பொறியியல் தொழிலரின் விளக்கம் பெறப்படினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, ஒருமாதம் கழிந்தபின்னர், பேரவையானது பதிவஞ்சலில் அதன் இறுதித் தீர்ப்புரையாகப் பிரதிவாதிக்கு அதன் இறுதி முடிவை வெளிப்படுத்துதல் வேண்டும்.

**திலக் த சில்வா**,
தவிசாளர்,
பொறியியல் பேரவை இலங்கை.

EOG 09 - 0233

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.